செ.வெ.எண்.07 நாள்: 02.07.2021

# தூத்துக்குடி மாவட்டம்
# கோவிட் 19 தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள்
# ஊடக அறிவிக்கை (Media Bulletin)

---

தூத்துக்குடி மாவட்டத்தின் ஊரக பகுதிகளில் 03.07.2021 அன்று தடுப்பூசி முகாம்கள் நடைபெறும் இடங்கள் - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா- 19 தீவிர தடுப்பு நடவடிக்கைகளுக்காக நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் கபசுர குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இருவேளை கிருமிநாசினி மூலம் தெளிப்பு தூய்மை பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனம் மூலம் கொரோனா தொற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கொரோனா பாதிப்பு கண்டறியும் பகுதிகளில் சிறப்பு காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தின் ஊரக பகுதிகளில 03.07.2021 அன்று தடுப்பூசி முகாம்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும் இடங்கள்

தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் புதுக்கோட்டை வ.உ.சி. நகர், கருங்குளம் ஒன்றியம் புதுக்குளம், அரசர்குளம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியம் புல்லாவழி, உடன்குடி ஒன்றியம் மெஞ்ஞானபுரம், திருச்செந்தூர் ஒன்றியம் என். முத்தையாபுரம், ஆழ்வார்திருநகரி ஒன்றியம் புறையூர், சாத்தான்குளம் ஒன்றியம் பொத்தகாலன்விளை, கோவில்பட்டி ஒன்றியம் வாலம்பட்டி, மேல ஈரால், ஓட்டபிடாரம் ஒன்றியம் வடக்கு ஆரைக்குளம், தெற்கு ஆரைக்குளம், கயத்தார் ஒன்றியம் கிருஷ்ணன் புதூர், பரசுராம புதூர், புதுப்பட்டி, வேப்பன்குளம், விளாத்திகுளம் ஒன்றியம் அயன்பொம்மையாபுரம், பனையடிபட்டி மற்றும் சாலமோன் நகர், கரிசல்குளம், ஆத்தங்கரை, சொக்கலிங்கபுரம், தொப்பம்பட்டி, ஓ. துரைச்சாமிபுரம், கந்தசாமிபுரம், அ.குமாரபுரம், குருவார்பட்டி, கருத்தையாபுரம், மகாராஜபுரம், கோடாங்கிப்பட்டி, புதூர் ஒன்றியம் பூதலாபுரம், சின்னையாபுரம், வாதலக்கரை, பி.வெங்கடேஸ்வரபுரம் ஆகிய பகுதிகளில் தடுப்பூசி முகாம்கள் நடைபெறுகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் மேற்கண்ட முகாம்களில் தவறாது கலந்து கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா-19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைக்கு 1077 கட்டணமில்லா தொலைபேசி எண் மூலமும், 0461-2340101 மற்றும் 9486454714 ஆகிய தொலைபேசி எண்களிலும் பொது மக்கள் கொரோனா நோய்த் தொற்று குறித்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.